# கொபெய்கனே பிரதேச சபை

# குருணாகல் மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மே 07 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 பெப்ரவரி 28 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 செப்தெம்பர் 30 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, கொபெய்கனே பிரதேச சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கொபெய்கனே பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

ஆண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 2,093,157 ஆக இருந்த போதிலும் நிதிக் கூற்றுக்களில் அது ரூபா 4,662,633 ஆகக் கணக்கு வைக்கப்பட்டமையினால் கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 2,569,476 தொகை அதிகரித்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே ஆண்டிற்குரிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 1,182,990 ஆக இருந்த போதிலும்

வருமானச் செலவினக் கணக்கில் அது வருமானமாக ரூபா 2,500,000 தொகை கணக்கு வைக்கப்பட்டமையினால் ஆண்டின் வருமானம் ரூபா 1,317,010 தொகை அதிகரித்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

**கணக்காய்விற்காக தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 12,712,039 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 683,497 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,682,887 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | -------------------- | -------------- | -------------- | -------------- |
| | | ரூபா | ரூபா | ரூபா |
| | | (000) | (000) | (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 1,280 | 1,285 | 269 |
| (ii) | வாடகை | 2,262 | 2,176 | 273 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 313 | 571 | 209 |
| (iv) | ஏனைய வருமானம் | 17,817 | 14,436 | 38,009 |

### 2.2.2 ஆதன வரி

ஆதனவரி பட்டியலிடல்கள் ரூபா 303,000 தெகையாக இருந்ததுடன் ஆதனவரி நிலுவை ரூபா 343,199 ஆக பட்டியலிடல்களினால் 113 சதவீதமாக இருந்தது. தெரிவுப் பரிசோதனையின் போது 1 - 3 வருடத்திற்கு இடைப்பட்ட காலத்திலிருந்து 38 ஆதனவரி அலகுகளுக்குரிய ரூபா 52,016 தொகை நிலுவையும், 3 - 5 வருடத்திற்கு இடைப்பட்ட காலத்திலிருந்து 26 ஆதனவரி அலகுகளுக்குரிய ரூபா 56,957 தொகை நிலுவையும், 5 வருட காலத்திற்கு மேற்பட்ட காலத்திலிருந்து 45 ஆதனவரி அலகுகளுக்குரிய ரூபா 104,633 தொகை நிலுவையுமாக 109 அலகு ஆதனவரி அலகுகளுக்குரிய ரூபா 213,606 தொகையான நிலுவையும் காணப்பட்டது.

### 2.2.3 வாடகை

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 02 சொத்துக்களுக்காக அறவிடவேண்டிய ரூபா 28,500 தொகையான நிலுவை வாடைக காணப்பட்டது.

**2.2.4 தொலைபேசிப் பரிவர்த்தனை கோபுரங்களுக்கான செயன்முறைக் கட்டணம்**

சபை அதிகாரப் பிரதேசத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொலைபேசிப் பரிவர்த்தனை கோபுரங்களின் எண்ணிக்கை 07 ஆக இருந்ததுடன் 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளின் போது அவைகளில் ரூபா 14 இலட்சம் அறவிடப்பட்டிருந்த போதிலும் வருடாந்த அனுமதிப் பத்திரக் கட்டண அறவிடல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 1,660,746 ஆகவும் கிடைக்கவேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 4,662,633 ஆகவும் இருந்தது.

**2.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

சுபையினால் 2006 ஏப்ரல் 12 ஆந் திகதி ரூபா 1,090,000 செலவில் கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்திட்டத்திற்காக பயன்படுத்தப்பட்ட சிறிய எக்ஸ்கெவேட்டர் பெகோ இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்ட திகதி தொடக்கம் 2011 ஒக்தோபர் மாதம் வரையும் செயற்படு தன்மைக்கு உட்படாமையின் காரணமாக மீளாய்வாண்டின் இறுதிவரையில் ரூபா 384,597 தொகை செலவில் பழுதுபார்க்கப்பட்டிருந்தது. உரிய காலப்பகுதியில் 3050 கிலோமீற்றர் மாத்திரம் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. இந்த இயந்திரத்தைக் கொள்வனவு செய்த காலம் தொடக்கம் செயற்பாடற்றுக் காணப்பட்ட போதிலும் இந்த போலியானவைகள் தொடர்பாக பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

(அ) பௌதீக பரிசோதனை / மெய்மையாய்வு அறிக்கை மூலம் உறுதிப்படுத்தப்படாத காணி, கட்டிடங்கள், மோட்டார் வாகனமும் வண்டிகளின் பெறுமதி ரூபா 25,528,467 ஆக இருந்ததுடன் தளபாடம் மற்றும் பொருத்திகளின் கையிலுள்ள இருப்புகளுக்குரிய பொருள் மெய்மையாய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் அவை பெறுமதியிடப்பட்டு காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2002 ஆம் ஆண்டிற்கு முன்பிலிருந்து சபைக்குச் சொந்தமான கட்டிடமொன்றில் கொபெய்கனே பொலீஸ் நிலையம் பேணப்பட்டு வருவதுடன் அதிலிருந்து மாதாந்த வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. இந்த காணியுடன் கூடிய கட்டிடம் தொடர்பாக காணிச் சுவீகரிக்கும் அதிகாரச் சட்டத்தின் கீழ் மதிப்பீட்டு அறிக்கை பெறப்பட்டிருந்ததுடன் ரூபா 50 இலட்சம் கொபய்கனே பொலிசினால் சபைக்குச் செலுத்தி உரிய காணி கையளிப்புச் செய்யப்பட்டிருந்தமை 2012 யூலை 30 ஆந் திகதியை கொபெய்கனே பிரதேச செயலாளரின் கடிதத்தின் மூலம் சபைக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் பணம் அறவிடப்பட்டு கையளித்தல் செயற்பாடுகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2.5 மனித வள முகாமைத்துவம்

(அ) சபையின் அங்கீகரிக்கப்பட் ஊழியர் எண்ணிக்கை 39 ஆகவும் உள்ள படியான ஊழியர் எண்ணிக்கை 32 ஆகவும் இருந்தமையினால் வெற்றிடம் 7 ஆகக் காணப்பட்டதுடன் அதனுள் செயலாளர் பதவி பதில் கடமை அடிப்படையில் காணப்படுவதுடன் அங்கீகரிக்கப்பட்ட 02 தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவியில் 01 பதவியும், 05 நூலகர் பதவிகளில் 04 பதவியும், வருமானக் கட்டுப்பாட்டாளர் பதவி 2009 ஆம் ஆண்டிலிருந்தும் வெற்றிடமாகக் காணப்பட்டது.

(ஆ) சபையில் 08 வீதித் தொழிலாளர்கள் இருந்ததுடன் அவர்கள் தினந்தோறும் கடமைகளில் ஈடுபடுத்துதல் தொடர்பாக எதிர்கால நிகழ்ச்சித் திட்டங்கள் காணப்படாதிருந்ததுடன் கையளிக்கப்படுகின்ற கடமைகளின் அடிப்படையில் அவர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அதற்குரிய ஊழியர்களைப் பகிர்ந்தளிக்கும் பதிவேடு பேணப்படாதிருந்ததுடன் ஒவ்வொரு நபருக்கும் ஒதுக்கப்பட்ட வேலை விபரமும் காணப்படவில்லை. அதன் காரணமாக ஏதாவது தினத்தில் உரிய தொழிலாளர்களை சேவையில் ஈடுபடுத்திய இடங்களை இனங்காண முடியாதிருந்தது.

## 2.6 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

(அ) சபையினால் வீதிகளைத் திருத்துதல் மற்றும் பராமரித்தல் செலவின விடயத்தின் கீழ் ரூபா 650,000 தொகை கிரயத்தின் அடிப்படையில் 9 வீதிகளைப் பராமரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் மீளமைத்தல் செயற்பாடுகள் உத்தேசிக்கப்பட்ட 9 வீதிகளில் ஒரு வீதி மாத்திரம் பூர்த்தி

செய்யப்பட்டிருந்ததுடன் அதற்குப் புறம்பாக இந்த நிதியேற்பாட்டின் அடிப்படையில் பல்வேறு சந்தர்ப்பங்களின் போது உறுப்பினர்களின் பிரேரணைகளின் அடிப்படையில் பல்வேறு வேலைகள் நிறைவேற்றப்பட்டிருந்தது.

(ஆ) உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்புப் பணம் உரிய பிரகாரம் செலுத்தப்படாமையினால் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அந்நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய மீதி ரூபா 454,882 ஆக இருந்தது.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிதிக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) ஒப்பந்த நிருவாகம்